2010 நவம்பர் 10]

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 762 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அரசின் சார்பாகவும், அரசு உதவியோடும், அதைப்போல தனியாருடைய முயற்சியின் காரணமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ ஒரு இலட்சத்து ஆறாயிரம் மாணவர்கள் ஒவ்வோர் ஆண்டும் அதிலிருந்து வருகிறார்கள். எனவே, ஆசிரியர் பயிற்சி முடித்துவிட்டு வரக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கையைக் கருத்திலே கொண்டு, இப்போது தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம் புதிதாக எந்தவொரு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கும், minority institutions தவிர, வேறு எந்தவொரு நிறுவனத்திற்கும் இப்போது அனுமதி அளிப்பதில்லை. எனவே, இந்த அடிப்படையிலே இருக்கிறபோது, காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே, ஏற்கெனவே மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனம் ஒன்று இயங்கிக்கொண்டிருக்கின்றது; அரசு உதவிப் பெறக்கூடிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்று இருக்கிறது; தனியார் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 42 இருக்கின்றன; காஞ்சிபுரம் தொகுதியிலே மாத்திரம் 6 இருக்கின்றன. எனவே, இவற்றையெல்லாம் கருத்திலேகொள்கிறபோது, புதிதாக அரசினுடைய சார்பிலேயும் ஒன்று அங்கே ஆரம்பிக்கக்கூடிய அவசியம் இருப்பதாக நான் கருதவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

18—

சாலை வசதி

***114311—திரு. எம்.என். கந்தசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 10

கோயம்புத்தூர் சிறுவாணி சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களின் அனுமதியோடு திருத்திய விடை அளிக்க அனுமதி கோருகிறேன். மாண்புமிகு தொண்டாமுத்தூர் தொகுதி உறுப்பினர் கேட்டிருக்கக்கூடிய சாலையானது கோவையிலிருந்து சிறுவாணி வரை செல்லக்கூடிய சாலை. இந்தச் சாலை ஏற்கெனவே அங்குள்ள போக்குவரத்துக்கு ஏற்ப அகலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் படிப்படியாக அந்தச் சாலை அகலப்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி.

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கலைஞருடைய ஆட்சியிலே அவருடைய தலைமையிலே, நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடைய அருமையான ஓய்வறியா உழைப்பினாலே தமிழகத்தில் இருக்கின்ற கோவை மாவட்டத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் 300 கோடி ரூபாய்க்கு மேலாக மாநகரத்தினுடைய வளர்ச்சிக்கு ஒதுக்கியிருந்தார்கள். கோவையிலே திரும்பிய இடமெல்லாம் தார்ச் சாலைகள், பூங்காக்கள், புதிய புதிய பஸ் நிலையங்கள், புதிய நடைபாதைகள் அமைத்துத் தந்தார்கள். ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேலாக கிடப்பிலே போடப்பட்டிருந்த கோவை-மேட்டுபாளையம் சாலைப் பணி இன்றையதினம் 50 கோடி ரூபாய் செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எங்களுடைய மாவட்ட அமைச்சர் பொங்கலூரார் அவர்களுடைய தலைமையில், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் அந்தச் சாலைப் பணிகள் எல்லாம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆனால், கோவை-சிறுவாணி சாலைப் பற்றி சொல்லியாகவேண்டும். கோவை-சிறுவாணி சாலை

2010 நவம்பர் 10]

ஆரம்பமாகின்ற கோவை டவுன் ஹால் பகுதி, வி.எம். காவல் நிலையம், வைசியால் வீதி, செட்டி வீதி, செல்வபுரம், எல்.ஐ.சி. காலனி வரை மிகக் குறுகியச் சாலை. அதற்கு அடுத்துதான் சிறுவாணி சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளதே தவிர, மூன்று, நான்கு கிலோ மீட்டர் இருக்கின்ற இந்த இடைப்பட்ட பகுதியிலே காலையிலே 11 மணி வரையிலும், மாலையில் 4 மணிக்கு மேலும், அங்கே போக்குவரத்து இடைஞ்சல்கள் ஏகப்பட்ட அளவிலே ஏற்படுகின்றன. அதையெல்லாம் சரி செய்தாகவேண்டும். ஏனென்றால், நிறைய பொறியியல் கல்லூரிகள் சிறுவாணி அடிவாரத்தில் இருக்கின்றன. கோவை குற்றாலம் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற பகுதி. பேரூர், பூண்டி, ஈஷா மையம் போன்ற பல முக்கியமான பகுதிகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தொழிற்சாலைகள் அதிகமாக இல்லாமல் குடியிருப்புகள் மட்டுமே நிறைந்த பகுதி கோவை சிறுவாணி சாலை. ஆக, இடைப்பட்ட அந்த 4 கிலோ மீட்டர் அளவிலே இருக்கின்ற பகுதி சாலைகளை விரிவுப்படுத்தி, அகலப்படுத்தி புதிதாக அமைத்துக் கொடுத்தால் மட்டும்தான், வருகின்ற ஆண்டுகளிலே, கோவை மாநகருக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்கள் எல்லாம் வந்து செல்லமுடியும். ஆக, அதைக் கருத்தில்கொண்டு வருகின்ற காலத்திலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். என். கந்தசாமி, கேள்வியை சுருக்கமாகக் கேட்டு முடியுங்கள்.

திரு. எம்.என். கந்தசாமி: சாலையை அகலப்படுத்துகின்ற பணிக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தங்களின்வாயிலாக மாண்புமிகு அமைச்சருக்குக் கோரிக்கையாக வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய அந்தச் சாலை மாவட்ட முக்கியச் சாலை என்கிற வகைப்பாட்டிலே சேர்க்கப்பட்டு, அந்தச் சாலை ஏறத்தாழ சுமார் 30 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலை. அந்தச் சாலையினுடைய துவக்கத்தில் போக்குவரத்து நெரிசல் இருப்பதை துறையும் அறியும். அது, கோவை மாநகரப் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய பகுதி. அவருடைய கேள்வியும் அதுதான்.

அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு இந்த நிதியாண்டிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறத்தாழ நூற்று. அறுபத்தைந்து இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதிலே நிலயெடுப்பு செய்யவேண்டியிருக்கின்ற காரணத்தால், நிலயெடுப்புப் பணி துவங்கியிருக்கிறது. அந்த நிலயெடுப்புப் பணி நிறைவுற்ற நேரத்திற்குப் பிறகு, அதற்குப் பிறகு, அந்தத் திட்டப் பணி துவங்கும். எனவே, அதிகமான போக்குவரத்து இருக்கக்கூடிய கோவை மாநகரத்தையொட்டியுள்ள அந்தப் பகுதி முதலிலே அகலப்படுத்தப்படும். மீதி இருக்கக்கூடிய சாலைகளும் 7 மீட்டர் அகலம் கொண்ட இரு வழித் தடங்கள் சாலைகளாகவும் ஐந்தரை மீட்டர் அகலம் கொண்ட இடை வழித்தடங்கள் சாலையாகவும் போக்குவரத்திற்கு உகந்ததாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் வைத்து, அந்தப் பகுதியினுடைய போக்குவரத்து நெரிசலையும் கருத்திற்கொண்டு படிப்படியாகத் தொடர்ந்து அந்தச் சாலை அகலப்படுத்தப்படும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி.

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இணைப்புச் சாலைகளாக இருக்கின்ற வீரகேரளம், வடவள்ளி, வேடவள்ளி போன்ற பேரூராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற அச்சலூர் சாலையானது நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு இருக்கிற காரணத்தால் அந்தச் சாலையை அகலப்படுத்தும்போது இதையும் விரிவுபடுத்தவேண்டும் என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய சாலை பேரூராட்சிக்குச் சொந்தமான சாலையாக இருப்பதாக அவரே குறிப்பிட்டிருக்கிறார். ஒப்படைக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். ஒப்படைக்கப்பட்டதாக

2010 நவம்பர் 10]

என்னுடைய கவனத்திற்கு வந்து, அதை இந்தத் துறை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அவர்கள் பேரூராட்சியின் சார்பாக தீர்மானம் நிறைவேற்றி இருப்பார்கள். அது மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக, பேரூராட்சி இயக்குநருக்கு வந்து நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சருக்கெல்லாம் கோப்பு சென்றுதான் அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அரசாணை வெளியிடவேண்டும். அப்படி அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், துறை நிச்சயம் அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

திரு. கூ.ந. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ல் நாவல்பட்டு அண்ணா நகரில், 'துணை நகரம்' என்று சொல்லக்கூடிய வகையிலே வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அண்ணா நகர் உருவாக்கப்பட்டது. அப்போது புதுக்கோட்டை சாலையில் இருந்து அண்ணா நகருக்குச் செல்வதற்கு சுமார் 5 கி.மீ. நீளத்திற்கு 4 வழிச் சாலை அமைக்கப்பட்டு அது ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக இதுவரை பராமரிக்கப்பட்டு வந்தது. அந்தப் பகுதியிலே இப்போது டைடல் பார்க் அமைக்கும், அந்தப் பணிகள் எல்லாம் விரைவிலே முடிக்கப்பட்டு, தொடங்கப்பட இருக்கிற நிலையில், அந்தச் சாலை மிக மோசமான நிலையில், பராமரிப்பில்லாமல் இருக்கிற காரணத்தால், அந்தச் சாலையை பராமரிப்பதற்கு வேண்டிய போதிய நிதி வசதி ஊராட்சி ஒன்றியத்திற்கு இல்லாத காரணத்தால் அதை நெடுஞ்சாலைத் துறைமூலம் எடுத்து மேம்பாடு செய்ய வேண்டுமென்ற முன் மொழிவுகள் ஊராட்சி ஒன்றியத்தின்மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரையோடு அரசுக்கு, நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிற நிலையில் இதுவரையில் அந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறையின்மூலம் எடுக்கப்பட்டு பராமரிக்கப்படாத, மேம்பாடு செய்யப்படாத நிலையில் இருக்கிறது. விரைவிலே டைடல் பார்க் தொடங்கப்பட இருக்கிற நிலையில் உடனடியாக அந்தச் சாலையினை நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக மேம்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 நவம்பர் 10

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் சாலையானது—கடந்த ஆண்டு வெள்ளப் பகுதியைப் பார்வையிடுவதற்காக திருச்சி மாவட்டத்திற்குச் சென்று இருந்தேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் அந்தச் சாலையை பார்வையிடச் சொன்னார்கள். அதைப் பார்வையிட்டபோது அந்தச் சாலை உள்ளாட்சிச் சாலையாக இருந்தது. அதன்பின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக ஊரக வளர்ச்சித் துறைக்கு வந்திருப்பதாக அறிகிறேன். விரைவில் அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறை ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில், அதற்கு நிதியொதுக்கீடும் கிடைக்கப் பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. விரைவில் அந்தச் சாலையைச் செப்பனிட துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

விடுதி

***62315—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை அரசு பாரதியார் நூற்றாண்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆதி திராவிடர் மாணவியர்களுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையளிக்கிறேன். உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை அரசு பாரதியார் நூற்றாண்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆதி திராவிடர் மாணவியர்களுக்கு ஏற்கெனவே ஆதி திராவிடர் நல மாணவியர்